**<u>என் கூடவே இரும் ஓ இயேசுவே</u>**

என் கூடவே இரும் ஓ இயேசுவே
நீர் இல்லாமல் நான் வாழ முடியாது
என் பக்கத்திலே இரும் ஓ இயேசுவே
நீர் இல்லாமல் நான் வாழ முடியாது

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா

இருளான வாழ்க்கையில் நீர் வெளிச்சமானீரே
உயிரற்ற வாழ்க்கையில் நீர் ஜீவனானீரே
என் வெளிச்சமும் நீரே என் ஜீவனும் நீரே
எனக்கெல்லாமே நீங்கதானப்பா

கண்ணீர் சிந்தும் நேரத்தில் நீர் தாயுமானீரே
காயப்பட்ட நேரத்தில் நீர் தகப்பனானீரே
என் அம்மாவும் நீரே என் அப்பாவும் நீரே
எனக்கெல்லாமே நீங்கதானப்பா

வியாதியின் நேரத்தில் நீர் வைத்தியரானீரே
சோதனை நேரத்தில் நீர் நண்பரானிரே
என் வைத்தியரும் நீரே என் நண்பரும் நீரே
எனக்கெல்லாமே நீங்கதானப்பா